*கவனிக்க.-2020.01.24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2161 - 2020 ජනවාරි මස 31 වැනි සිකුරාදා - 2020.01.31

*2161 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 164 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 165 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 166 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | |


**கவனிக்க.-** துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தம்) சட்டமூலம் 2020, சனவரி மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*'ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.''.*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


*163-B 82003-405 (2020/01)*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## *காணி அமைச்சு*

*இலங்கை நில அளவைத் திணைக்களம்*

**விலைமனுக் கோரல்**

*பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் – 2020*

*கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகங்களில் விலைமனுக்கோரல்கள் 2020.03.13ஆந் திகதி அன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக்கோரல்கள் பி. ப. 2.05 மணிக்குத் திறக்கப்படும்.*

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்வி மனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப் படும் திகதி |
|---|---|---|---|---|---|
| வட மத்திய மாகாணம் | அநுராதபுரம் | பதவிய | மாகாண நில அளவையாளர் நாயகம் (வடமத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், அநுராதபுரம். | பதவிய நகருக்கு அருகில் | 2020.05.01 இருந்து 02 வருடங்களுக்கு |
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | களவாஞ்சிக் குடி | மாகாண நில அளவையாளர் நாயகம் (கிழக்கு மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், திருகோணமலை. | களுவாஞ்சிக்குடி நகருக்கு அருகில் | 2020.04.01 இருந்து 02 வருடங்களுக்கு |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் :**

*அனைத்து கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தபட்சம் மூன்று வண்டிகள் நிறுத்தி வைக்கக்கூடிய இடவசதியும் அத்துடன் வாகனத் தரிப்பிட வசதியும் இருத்தல் வேண்டும். அதிகாரிகள் 10 பேருக்கு போதுமான அரைகள் கொண்ட இடவசதி இருத்தல் வேண்டும்.*

*கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல் (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2020.03.13 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.*

எஸ். எம். பீ.பீ. சங்கக்கார,
*நில அளவையாளர் நாயகம்.*

*நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு 5.*

**விலைமனுக் கோரல் விண்ணப்பப்படிவம்**

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்குக் கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2020**

**கட்டிட உரிமையாளரின்:**

01. முழுப்பெயர் :----.
02. முகவரி :----.
03. தொலைபேசி இலக்கம் :----.
04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

**கட்டிடம் தொடர்பாக :**

01. எந்த பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது? ----.
02. மாதாந்த வாடகைத் தொகை ? ----.
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி: ----.
04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ : ----.
05. இடத்தின் விஸ்தீரணம் : ----.
06. கட்டிடத்தின் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களும் :----.
07. தனியாக அவதானிக்கக் கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா? ----.
08. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா? ----.
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில் /கம்பி வேலி/. . . . . . ): ----.
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை : ----.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானவை எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நிலஅளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத் தருகின்றேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

1- 784

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கு ஏற்ப நாகொடவித்தான என்டர்டெய்ன்மென்ட் என்ட் அட்வர்டைசிங் ( பிரைவட்) லிமிட்டட் தனது பெயரை 2019,திசெம்பர் 18 ஆந் திகதி வழங்கிய சான்றிதழுக்கமைய ஹரேன் நாகொடவித்தான குரூப் ஒஃப் கம்பனீஸ் (பிரைவட்) லிமிட்டட் என மாற்றம் செய்துள்ளது.-

*கம்பனியின் முன்னாள் பெயர்* : நாகொடவித்தான என்டர்டெய்ன்மென்ட் என்ட் அட்வர்டைசிங் ( பிரைவட்) லிமிட்டட்
*பதிவிலக்கம்* : பீவீ 109360
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2015.10.23
*பதிவு செய்யப்பட்ட முகவரி* : ஏ 1/8, பெரஹரா மாவத்தை, கொழும்பு 3
*கம்பனியின் புதிய பெயர்* : ஹரேன் நாகொடவித்தான குரூப் ஒஃப் கம்பனீஸ் (பிரைவட்) லிமிட்டட்

திருமதி ஆர். கே. ஜயவீர,
கம்பனிச் செயலாளர்.

1- 739

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*நிறுவனத்தின் பெயர்* : ஸ்பைஸ் மீடியா (பிரைவேட்) லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்*: இல. 24ஏ, புல்லர்ஸ் லேன், கொழும்பு 7
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2020, சனவரி 07
*பதிவிலக்கம்* : பீவீ 00219202

எஃப் .எஸ். சாலி,
நிறுவனத்தின் செயலாளர்.

19/5, சுலைமான்டெரஸ்,
கொழும்பு 5.

1- 743

---

## விசேட அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

மஹரகம, கொடிகமுவ, தாப்பவத்த வீதி,இல. 25ஏ/42 எனும் முகவரியில் வசிக்கும் சம்மு ஆரச்சிகே நிலானி கீர்திகா எதிரிசிங்ஹ ( தே.அ.அ.இல. 748100660V) ஆகிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பிரசன்ன பல்லேவெல என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012.11.11 ஆந்

திகதிய 812 ஆம் இலக்க விசேட அற்றோணித்தத்துவத்தினால் நுகேகொட, பாகொட வீதி, இல. 25/ 20ஏ எனும் முகவரியில் வசிக்கும் ராஜபக்ஷ முதியன்சேலாகே நில்மினி அனுருத்திகா கருணாரத்ன ( தே.அ.அ.இல. 647572251V) என்பவரை எனது அற்றோணித்தத்துவகாரராக நியமித்திருப்பதை இத்தால் இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன். இன்று முதல் மேற்படி எனது அற்றோணித்தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப் பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

சம்மு ஆரச்சிகே நிலானி
கீர்திகா எதிரிசிங்ஹ.

1- 771

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

நிரோஷா தில்ருக்ஷி அல்விஸ் ஜயசிங்க ( தே.அ.அ.இல. 756491997V) ஆகிய நான், 2019, ஒற்றோபர் மாதம் பதிநான்காம் திகதி ஹோமாகமவில் வசிக்கும் கே. சீ. என். அபேரத்ன பிரசித்த நொத்தாரிசினால் எழுதி உறுதி செய்யப்பட்டதும், நுகேகொடை, தெல்கந்தவில் அமைந்துள்ள உதவிப் பதிவாளர் நாயகத்தின் மேல் மாகாண வலய அலுவலகத்தில் 2019.10.29 ஆந் திகதி முறையே தொடர் இல. 4921, பதிவேட்டு இல. 56 மற்றும் அத்தியாய இல. 245 இல் பதிவு செய்யப்பட்டுமான அற்றோணித் தத்துவப் பத்திர இல. 5471 என்ற அற்றோணித்தத்துவப் பத்திரம் மூலம் ஹோமாகம, கொடகம, அக்ஷிதான மாவத்தை, இல. 163 என்ற இடத்தில் குடியிருக்கும் சந்திமா மல்ருக்ஷி அல்விஸ் ஜயசிங்க ( தே.அ.அ.இல. 745411703V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவ அதிகாரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் உடனடியாக இரத்துச் செய்கின்றேன் எனவும் மேற்படி நபரால் இதன்பின் புரியப்படும் ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்புக் கூற மாட்டேன் எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

நிரோஷா தில்ருக்ஷி அல்விஸ்
ஜயசிங்க.

1- 772

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில், கொழும்பு05, ஹவ்லொக் வீதி, இல. 220/04 ஐக் கொண்ட இடத்தில் வசிக்கும் சுரேஸ்குமார் பேரின்பநாயகம் ( தே.அ.அ.இல. 732580042V) ஆகிய என்னால் கிரேசன் இ.பெரேரா பிரசித்த நொத்தாரிசினால் உறுதிப்படுத்தப்பட்ட 2006ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதிய இல. 2267 கொண்ட அற்றோணி அனுமதிப் பத்திரம் மூலம் கொழும்பு 5, ஹவ்லொக் வீதி, இல. 220/4 என்னும் இடத்தில் வசிக்கும் நாகலிங்கம் பேரின்பநாயகம் என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு செல்லுபடியற்றதாக்கப்படுகின்றது.

சுரேஸ்குமார் பேரின்பநாயகம்.

2019.11.27.

1- 791

---

## ஏல விற்பனைகள்

### ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ — கண்டி கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை

**மிகவும் பெறுமதிமிக்க சொத்து கண்டி மாவட்டத்தில் கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் கண்டி மாநகர சபை எல்லைக்குட்பட்ட அருப்பொல மேற்கு 223 கிராம அலுவலர் பிரிவில் பூவெலிகட தல்வத்த கிராமத்தில் தர்மாஷோக மாவத்தையில் அமைந்துள்ள வரிப்பண இல. 102 "பொன்சேகா வத்த" எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் A.M. திலகரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015.01.19 ஆந்திகதிய 1361Aஆம்இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 2 மற்றும் லொட் 3 என அடையாளமிடப்பட்ட ஒன்றிணைந்த இரு காணித்துண்டுகளும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 03 றூட் 20 பேர்ச்சஸ் பரப்பளவானது.**

இவ்வாதனம் தொன் பியதிஸ்ஸ குமாரகே மற்றும் தொன் துஷான் இந்திக குமாரகே ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

**ஆதனத்தை வந்தடைதல்.-** கண்டி நகர மத்தியிலிருந்து அநகாரிக தர்மபால மாவத்தையில் வந்து லேவெல்ல பாதைக்கு (ஜெனரால் பாரமி குலதுங்க மாவத்தை) பிரவேசித்து அப்பாதையில் சுமார் 2.5 கி. மீற்றர் தூரம் வந்து 1/7 மதகு வரை வந்து இடது பக்கமாக திரும்பி தர்மாஷோக மாவத்தைக்கு பிரவேசித்து அப்பாதையில் சுமார் 700 மீற்றர் தூரம் வாகொல்ல மயானம் வரை சென்றால் பாதையின் எல்லையில் வலதுபக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனத்தை 2020.02.19 ஆந் திகதி பி.ப. 3.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.-**2018.07.06 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும்,

2018.07.17 ஆந் திகதிய "லக்பிம", "டேலி மிரர்"மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ;
(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும்.

கொள்முதலில் மிகுதி 90%மும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு:** "சிரேஷ்ட முகாமையாளர், (கடன் அறவிடுதல் பிரிவு) ஹற்றன் நஷனல் வங்கி பீ . எல். சீ. இல. 479, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10. " தொலைபேசி இல.: 011-2661835, 011- 2661836, 011- 2661826.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி இல.: 081-2210595, 071- 8446374, 071 - 4962449

1- 751

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. - கல்கமுவ கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம் மற்றும் பதிவுப் பிரிவு, ஹெல்கொட எகொட கோரளை, ஹிரியால ஹத்பத்துவ, கனேவத்த பிரதேச செயலாளர் பிரிவு இப்பாகமுவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தம்பகல்ல இல. 445 , கிராம அலுவலர் பிரிவில் தம்பகல்லயில் அமைந்துள்ள "பஹலமூகலான மற்றும் வத்துயாய" எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் A.S.K. பரனகே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014.12.25 ஆந் திகதிய 2014 / 150ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும்் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 1 ஏக்கர் , 02 றூட், 23.5 பேர்ச்சஸ் பரப்பளவானது.

இவ்வாதனம் J.S. டிரேடிங் எனும் பெயர் மகுடத்தின்கீழ் தனி உரிமையாளராக வியாபாரத்தை நடாத்திச் செல்லும் சேனாநாயக்க அமரசிங்ஹ மொஹொட்டி அப்புஹாமிலாகே ஜயவங்ஷ என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ .இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

**ஆதனத்தை வந்தடைதல் :** குருநாகலையிலிருந்து தம்புள்ளை பாதையில் சுமார் 2. கி.மீ. தூரம் முத்தெட்டுகல சந்தி வரை வந்து இடதுபக்கமாகவுள்ள ஹிரிபிட்டிய பாதைக்குத் திரும்பி அப்பாதையில் சுமார் 18.4 கி.மீ. தூரம் சென்று ஹிரிபிட்டிய குறுக்குப் பாதை சந்தியில் இடதுபக்கமாகத் திரும்பி வாரியபொல பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 2.3 கி.மீ. தூரம் சென்று கனேவத்த வரை வந்து வலதுபக்கமாக திரும்பி கெக்குலாவல பாதையில் சுமார் 05 கி.மீ. தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையில் இடதுபக்கத்தில் தம்பகல்ல சந்தியில் அமைந்துள்ளது.

2020.02.19ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**-2019.04.18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2019.05.06ஆந் திகதிய மவ்பிம , டேலி மிரர் மற்றும் தினகரன் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை:** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க் காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்:-

1. கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
2. பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
3. ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை);
4. சகல பகிரங்கப்படுத்தல் செலவு;
5. இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ.1000 ;
6. நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் .

கொள்முதலில் மிகுதி 90% மற்றும் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு: சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல் ) ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சீ , இல. 479, T.B. ஜயா மாவத்தை, கொழும்பு 10.

தொலைபேசி : 011-2661835, 011-2661836.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற ஏல
விற்பனையாளர்.

இல. 369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மட, கண்டி
தொலைபேசி: 081-2210595, 071-8446374, 071-4962449.

1- 752

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ – கொடிகாமம் கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை*

**யாழ்ப்பாணம் மாவட்டம், சாவகச்சேரி பட்டின சபை எல்லைக்குட்பட்ட வட்டாரம் இல. 18( J319) மீசாலை மேற்கு கிராம அலுவலர் பிரிவில் மீசாலை கிராமத்தில் காளிகோயில் பாதையில் அமைந்துள்ள "பென்ட்ரிக்கர்னி" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் S. சர்வேஸ்வரன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014.06.07 ஆந் திகதிய 14128 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 01 Lms Vc மற்றும் 17 Kls பரப்பளவானது.**

இவ்வாதனம் அகாஷ் டெக்ஸ்டைல் இன்டஸ்ட்ரீஸ் (பிரைவட்) லிமிட்டட் ஈட்டாளராகவும் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- சாவகச்சேரி நகரத்திலிருந்து A9 பாதையில் சுமார் 3 கி.மீற்றர் மீசாலை மேற்கு வரை வந்து இடது பக்கம் திரும்பி காளிகோயில் பாதைக்கு வந்து அப்பாதையில் சுமார் 200 மீற்றர் தூரம் சென்று இப்பாதையில் வலது பக்கம் காளி கோயில் பாதைக்கு எதிர்த்ததாக இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனத்தை 2020.02.20 ஆந் திகதி பி.ப.1.00 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.**- 2018.01.19 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2018.01.25ஆந் திகதிய "லக்பிம","டெயிலி மிரர்"மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ஏல விற்பனையாளரிடம் ரொக்கமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 750 ரூபா;
(6) நொத்தாரிசுக் கட்டணம், விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் 2,500 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90%மும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**: சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சீ, இல. 479, ரி. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 011-2661835, 011- 2661836.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி இல.: 081-2210595, 071- 8446374.
071-4962449

1- 753

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - ஏறாவூர் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை*

**மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் கிராமத்தில் ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் ஏறாவூர் பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மீராகேனி கிராம அலுவலர் பிரிவு மீராகேனி கிராமத்தில் மீராகேனி பாதையில் அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் A.M. நஜுமுடீன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2017.02.11 ஆந் திகதிய AMN/17/EP/ 7499 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 01 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 01 றூட் 30.85 பேர்ச் பரப்பளவான காணியும் அங்கு பொருத்தப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சகல நிலையான இயந்திரங்களும் மற்றும் பொருத்தப்பட்டிருக்கும் உபகரணங்களும் இயந்திரங்களும் உட்பட கீழ் விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

| விபரம் | வர்க்கம் | ஆரம்ப நாடு |
|---|---|---|
| *நிவ் ரைஸ் சோட்டிங் மெஷின் (1 யுனிட்)* | 6R ஹய் ஸ்பீட் ரியல் யட்டிம் ஐடின்டிபிகேஷன் சிஸ்டம் 6SXM378 | *சீனா* |
| *டிரேங்க் (08)* | - | - |
| *எலிவேட் (2" × 1/2 ×26(06)* | - | - |
| *கலர் சோட் கெபின் (01)* | - | - |
| *மோட்டர் 3 HP (06)* | - | - |
| *1200C வெயிட்பிரிப் ப்டிலட்போம் (01 யுனிட்)* | - | *ஐக்கிய இராச்சியம்* |

**இவ்வாதனம் ஒரய்ஷா ரைஸ் எக்ஸ்போட்டர்ஸ் (பிரைவெட்) லிமிட்டெட் கடப்பாடுடையதாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.**

***ஆதனத்தை வந்தடைதல்.***- *ஏறாவூர் நகரத்தில் மணிக்கூட்டு கோபுர சந்தியிலிருந்து புன்னைக் குடா பாதையில் சுமார் 800 மீற்றர் தூரம் சென்று வலது பக்கமாக திரும்பி மீராகேணி பாதைக்குப் பிரவேசித்து இப்பாதையில் சுமார் 300 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் எல்லையில் இடது பக்கமாக இவ்வாதனம் அமைந்துள்ளது.*

*2020.02.25ஆந் திகதி பி.ப. 1.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.***- *2018.11.16 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2018.11.28 ஆந் திகதிய "லக்பிம", "டேலிமிரர்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள் முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

*(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;*
*(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);*
*(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;*
*(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;*
*(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1000 ரூபா;*

*கொள்முதலில் மிகுதி 90% மற்றும் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.*

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு:** "சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீ . எல். சீ., இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10." உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல.: 011-2661835, 011- 2661836, 011-2661826.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மடை,
கண்டி.
தொலைபேசி இல.: 081-2310595, 071- 8446374, 071- 4962449

1- 754

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - ஏறாவூர் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை*

*மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் கிராமத்தில் ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் , ஏறாவூர் பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மீராகேனி கிராம அலுவலர் பிரிவு, மீராகேனி கிராமத்தில் மீராகேனி பாதையில் அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் A.M. நஜுவுடீன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2017.02.11 ஆந் திகதிய AMN/17/EP/ 7500ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 01 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 03 றூட் 20.60 பேர்ச் பரப்பளவான காணியும் அங்கு பொருத்தப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சகல இயந்திரங்களும் மற்றும் பொருத்தப்பட்டிருக்கும் நிலையான உபகரணங்களும் இயந்திரங்களும் உட்பட கீழ் விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் :*

| எண் | விபரம் | வர்க்கம் | ஆரம்ப நாடு |
|---|---|---|---|
| 01 | போ டொன் கெபேசிட்டி ஸ்டீம் பொயிலர் | ஷெல்மெக்ஸ் - தர்மெக்ஸ் லிமிட்டட் தொடர் இலக்கம்1B-300-2 | இந்தியா |
| 01 | பேட் டிரையர் - 26000Kg | | இந்தியா |
| 01 | பர்னர் வித் 3.0 HP மோட்டர்ஸ் | | இலங்கை |
| 01 | பிரஸர் பம்ப் வித் 5.0HP மோட்டர்ஸ் | | இலங்கை |
| 02 | பேட் கூலர் 2×220.000 | | இலங்கை |
| 01 | பேட் பொயிலர் எலிவேட்டர் - 132 அடி | | இலங்கை |
| 06 | ஸ்டீல் பொய்லர் டேங்க்ஸ் வித் 12 அவுட் லைட்ஸ் | | இலங்கை |
| 03 | டஸ்ட் சிலோஸ் 10 அடி உயரம் 3×330,000 | | இலங்கை |
| 02 | பேட் கிளீனர் வித் மோட்டர்ஸ் 7.50 HP | | சீனா |
| 01 | பேட் கிளீனர் செப்பரேட்டர் வித் 3.0 HP | | இந்தியா |
| 01 | ரைஸ் டிரயர் வித் 5.0 HP மோட்டேர்ஸ் | | இலங்கை |
| 01 | ரைஸ் டிரயர் வித் 3.0 HP மோட்டேர்ஸ் | | சீனா |
| 01 | ரைஸ் எலிவேட்டர் - 496 அடி | | இலங்கை |
| 02 | பெனல் போடர்ஸ் 7×750,000 | | சீனா |
| 01 | CCD ரைஸ் கலர் சோட்டர் 4R மெஷின் வித் ஓல் எக்சசரீஸ் | ஹேப்பி தாய் ஒப்டோ இலெக்ரோனிக் 65×M252 | சீனா |
| 01 | பேட் ஸ்டோனர் | DXCIN TQSX120 | சீனா |
| 01 | செப்பரேட்டர் | DXCIN MGCz 100 ×10 | சீனா |
| 01 | ரைஸ் கிரேடர் | DXCIN MMIP 80×3 | சீனா |
| 01 | பேட் கிளீனர் | DXCIN TQLz 100 ×2 | சீனா |
| 01 | பேட் ஸ்ரோனேர் | DXCIN TQS× 100 | சீனா |
| 02 | ரைஸ் வைட்னர் | DXCIN | சீனா |
| 02 | சில்கி பொலிஷர் | DXCIN MPGH 19×1 | சீனா |
| 01 | பேட் டிரயர் வித் கெபேசிட்டி ஒப் 30,000 Kg | | |
| 01 | யுனிட் ஒப் கெஜு பொயிலிங் டேங்க் | | |

இவ்வாதனம் ஒரய்ஷா ரைஸ் எக்ஸ்போட்டர்ஸ் (பிரைவெட்) லிமிட்டெட் கடப்பாடுடையதாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- ஏறாவூர் நகரத்தில் மணிக்கூட்டு கோபுர சந்தியிலிருந்து புன்னை குடா பாதையில் சுமார் 800 மீற்றர் தூரம் சென்று வலது பக்கமாக திரும்பி மீராகேனி பாதைக்குப் பிரவேசித்து இப்பாதையில் சுமார் 300 மீற்றர் தூரம் சென்றால் இடது பக்கமாக உள்ள 20 அடி அகலமான பாதைக்குப் பிரவேசித்து அப் பாதையில் சுமார் 75 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் எல்லையில் வலது பக்கமாக இவ்வாதனம் அமைந்துள்ளது.

2020.02.25ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.**- 2018.11.16 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2018.11.28ஆந் திகதிய "லக்பிம", "டேலிமிரர்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள் முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1000 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90% மற்றும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**: "சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீ . எல். சீ., இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10. " உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல.: 011-2661835, 011- 2661836, 011-2661826.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி இல.: 081-2310595, 071- 8446374, 071- 4962449.

1- 755

---

### ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ — மட்டக்களப்பு கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ் உக்வத்த ஆரச்சிலாகே பிரசன்ஸித் லானில் ஜயவர்தன என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்படும் ஆதனங்கள் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**1 ஆம் விற்பனை**

2020.02.24 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில்

**ஆதனத்தின் விபரம்.**- கேகாலை மாவட்டம், ருவன்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவு ருவன்வெல்ல பிரதேச சபை

எல்லைக்குட்பட்ட உடகனுகல இல. 102C கிராம அலுவலர் பிரிவு, உடகனுகல கிராமத்தில் அமைந்துள்ள "கெக்குனஅத்துல ஹேன்யாய எனும் சந்தமாலி வத்த" எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் W.R.J. விஜேசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015.04.26 ஆந் திகதிய 612 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 மற்றும் 02 எனஅடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். லொட் 01 (06 ஏ. 01 றூ.27.15பே.), லொட் -2, (09 ஏ. 03 றூ.39.44பே.), முழுக் காணி (16 ஏ. 01 றூ.26.59பே.),பரப்பளவானது.

உரிமம் பெற்ற நில அளவையாளர் D.A. விஜேசிங்ஹ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2000.12.29 ஆந் திகதிய 2409A மற்றும் 2001.08.29 ஆந் திகதிய D/ 3065 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட ஒதுக்கப்பட்டுள்ள பாதையின் மீது பாதை உரிமை மற்றும் சகல உரிமைகளும் உண்டு.

**ஆதனத்தை வந்தடைதல்.**- கொழும்பு நகரத்திலிருந்து ஹைலெவல் பாதையூடாக அவிஸ்ஸாவளை சந்தி வரை வந்து இடதுபக்கமாகவுள்ள ஹற்றன் பாதைக்குத் திரும்பி சுமார் 600 மீற்றர் தூரம் சென்று இடது பக்கமாகத் திரும்பி சுமார் 850 மீற்றர் தூரம் தல்துவ சந்தி வரை வந்து கட்டுநாயக்க பாதைக்குத் ( நிட்டம்புவ பாதை) திரும்பி அப்பாதையில் சுமார் 1.125 கி.மீ. (09 ஆம் கி.மீ.கம்பத்தை கடந்து சுமார் 100 மீற்றர் தூரம் ) அமிதிரிகல சந்திக்கு வந்து இடது பக்கமாகத் திரும்பி சுமார் 75 மீற்றர் தூரம் சென்று ஹிசெல்ல பாதையில் மேலும் சுமார் 750 மீற்றர் தூரம் சென்று இடது பக்கமாகத் திரும்பி குடும்பிகந்த பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் நேராக 750 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையில் இருபுறமும் அமைந்துள்ளது.

**2 ஆம் விற்பனை**

2020.01.24 ஆந் திகதி பி.ப. 1.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில்

**ஆதனத்தின் விபரம்.**- கொழும்பு மாவட்டம், மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவு, மொரட்டுவை நகர சபை எல்லைக்குட்பட்ட 548 கல்தெமுல்ல கிராம அலுவலர் பிரிவில் இல. 138 , ஈபட் ஒழுங்கையில் கல்தேமுல்லையில் அமைந்துள்ள "அலுபோதன்கஹகுருந்துவத்த" எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் W.A. நோபாட் பர்னாந்து என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2006.11.15 ஆந் திகதிய 3667 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 02B என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். இது 8.85 பேர்ச் பரப்பளவானது.

மேற்கூறிய வரைபட இல. 3667 இல் லொட் 2C (10 அடி அகலமான பாதைக்காக ஒதுக்கப்பட்டது) மீது பாதை உரிமை மற்றும் சகல உரிமைகளும் உண்டு.

**ஆதனத்தை வந்தடைதல்.**- கொழும்பு நகரத்திலிருந்து காலி பாதையில் மொரட்டுவை நோக்கி சுமார் 15 கி.மீ. தூரம் ரத்மலானை கொலுமடம சந்தியை கடந்து சுமார் 100 மீற்றர் தூரம் வந்து வலது பக்கமாகத் திரும்பி ஈபட் ஒழுங்கைக்குள் பிரவேசித்து அவ்வொழுங்கையில் சுமார் 800 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையின் வலது பக்கத்தில் அமைந்துள்ளது. (வரிப்பண இல. 135, ஈபட் ஒழுங்கை).

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.**- 2019.03.22 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2019.03.27ஆந் திகதிய "லக்பிம","டெயிலி மிரர்"மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ஏல விற்பனையாளரிடம் ரொக்கமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;

(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);

(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1,500 ரூபா;

(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90%மும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இல் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**: சிரேஷ்ட முகாமையாளர், (கடன் அறவிடுதல்) ஹற்றன் நஷனல் வங்கி பீ . எல். சீ. இல. 479, ரி. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 011-2661835, 011- 2661836.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி இல.: 081-2310595, 071- 8446374.
071-4962449

1- 756

**பேன் ஏசியா வங்கித் தொழிற் கூட்டுத்தாபனம் பீ.எல்.சீ.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை*

பேன் ஏசியா வங்கித் தொழிற் கூட்டுத்தாபனம் பீ.எல்.சீ. யினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆதனம் கீழே குறிப்பிடப்பட்ட திகதியிலும் நேரத்திலும் அவ்வாதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவினுள் பொரலெஸ்கமுவ நகர சபை எல்லைகளிலும், பெபிலியான மேற்கு , 535 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவினுள் பெபிலியானவில் அமைந்துள்ளதும், கொழும்பு வீதியில் 475 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும் அதன் மீதுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் சேர்த்து மாக்கோனாய ஓவிட்ட என அழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஜீ.எல். பி. நாணயக்கார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1989, நவெம்பர் 08 ஆந் திகதிய மற்றும் 12 ஆந் திகதிய 7193ஆம்இலக்கவரைபடத்திற்குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 4A எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்.

**(காணியின் விஸ்தீரணம்: 0ஏ. 0றூ. 20பே.)**

**2020, பெப்புருவரி 18 ஆந் திகதி மு. ப. 11.30மணிக்கு**

**ஆதனத்துக்கான அணுகுகை.**- கொழும்பிலிருந்து ஹைலெவல் வீதி வழியாக ஏறத்தாழ 10.5 கி.மீற்றர் தூரம் வரை 4/2 ஆம் இலக்க மதகைக் கடந்து வலது பக்கத்திலுள்ள ஆதனம் வரை செல்லவும். பெபிலியான சந்திக்கான தூரம் ஏறத்தாழ 300 மீற்றர்களாகும்.

"கடப்பாடுடையவரான" வன்னியாராச்சிகே நியூட்டன் அமரதாச பொன்சேக்கா மற்றும் முனசிங்க குமாரதுங்க ஆராச்சிகே பிரேமலதா பொன்சேக்கா என்போர் மற்றும் "ஈடுவைப்பவராக" முனசிங்க குமாரதுங்க ஆராச்சிகே பிரேமலதா பொன்சேக்கா என்பவர் பிரசித்த நொத்தாரிசு பீ. எஸ். அரலிய தயானந்த என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016.09.21 ஆந் திகதிய 334 ஆம் இலக்க முதனிலை மிதக்கும் ஈட்டுமுறிமீது வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2020.01.03 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2019.12.21 ஆந் திகதிய "திவயின", "த ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்ட வுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க் காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
2. உள்ளூரதிகார சபை விதிப்பனவுகளும் அதன் மீதான சேபெவ விதிப்பனவுகளும் 1% ;
3. ஏலவிற்பனையாளர் தரகான கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம்) ;
4. விற்பனையில் மொத்தச் செலவும் ஏனைய விதிப்பன வுகளும்;
5. விற்பனை நிபந்தனைக்காக நொத்தாரிசுவின் அத்தாட் சிப்படுத்துகைக் கட்டணங்கள் (ரூபா 3,000).

கொள்வனவு விலையின் 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் வங்கிக்குச் செலுத்தப்படல் வேண்டும். மேலே விதிக்கப்பட்டவாறு சொல்லப்பட்ட தொகை 30 நாட்களினுட் செலுத்தப்படாவிடின் வங்கியானது ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10 சதவீதத்தை இழப்பீடு செய்து ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கு உரிமையுடையதாதல் வேண்டும்.

உரித்துறுதிகளும்வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களும்கொழும்பு 3, 450,காலி வீதி, தலைமையலுவலகம், பான் ஏசியா வங்கித் தொழிற் கூட்டுத்தாபனம் பீஎல்சீ , முகாமையாளர் அறவீடுகள் என்பவரிடம் பார்வையிட்டு பெற்றுக்கொள்ளப்படலாம். தொலைபேசி இலக்கங்கள்: 011- 4667218 /011-4667229.

பீ.கே.ஈ.சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர்,
பெறுமான மதிப்பீட்டாளர்
மற்றும் உத்தரவுபெற்ற
ஏலவிற்பனையாளர்.

இல.134, பத்தகானை வீதி,
கோட்டை,
தொலைபேசி இல. : 011-2873656, 0777672082.

1- 760

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.